செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100
सत्यमेव जयते

# சுவடியியல் புலம்

**நடத்தும்**

## மூலபாடத் திறனாய்வு: தமிழ்ச் செவ்வியல் நூல்களில் ஒலியியல் / எழுத்தியல் வேறுபாடுகள்

(Textual Criticism: Phonological / Orthographical Variations in the Classical Tamil Texts)

**பயிலரங்கம் – 12**

**(23.11.2022 – 29.11.2022)**

**அறிவிப்பும் அழைப்பும்**

பாடம் என்பது படிப்பதற்குரிய ஆக்கத்தைக் குறிக்கும். அப்பாடம் மூலபாடம் உரைப்பாடம் என்னும் இருவகையாகும். அவற்றில் மூலபாடம் என்பது மூல ஆசிரியரால் எழுதிய உரையில்லாத நூலைக் குறிப்பதாகும். அம்மூல நூல் காலங்கடந்து பொருள் நன்கு விளங்கிக்கொள்ள முடியாத நிலையில் அதற்கு உரையாசிரியர்களால் உரை எழுதப்பட்டது. அந்நூல் மூலத்துடன் இருந்தாலும் அது உரைப்பாடம் என்றே அழைக்கப்பட்டது.

நூல்கள் ஏட்டுச் சுவடியில் எழுதும் வழக்கமாதலின் அது குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் அழியும் தன்மை உடையதாகும். அதனால் மூல ஆசிரியர் எழுதிய நூல் ஏடு எழுதுவோரால் மாற்று ஓலையில் படி எடுக்கப்பட்டது. அப்படியில் முன்னோர் எழுதியவை அப்படியே இருந்தாலும் சில நேரங்களில் எழுதுவோரின் கவனக் குறைவால் முன் நூலில் கண்டவற்றுக்கு மாற்றாகப் பாடங்களை எழுதிவிடுவதுண்டு. அப்பாடங்கள் பிரதிபேதம், பாடபேதம், பாடாந்தரம் என்னும் பெயர்களால் சுட்டப்படுகின்றன. இம்மாற்றுப் பாடங்கள் எந்தப் பாடத்தை மூல ஆசிரியர் எழுதினார் என்னும் ஆராய்ச்சிக்கு வழிவகுத்துவிடுகின்றன. இவற்றை ஆய்வுகள் மூலமாகக் கண்டறிந்து ஆசிரியரின் உண்மையான பாடத்தை நிறுவுவதே மூலபாட ஆய்வாகும்.

தமிழில் மூலபாட ஆய்வு என்பது பழைய உரையாசிரியர் காலத்திலேயே இருந்துள்ளது. அவ்வுரையாசிரியர்கள் ஒரு நூலுக்கு உரையெழுதுங்கால் தம் காலத்திற்கு முன்பு அந்நூலுக்கு எழுதப்பட்ட பல்வேறு ஏட்டுச் சுவடிகளைக் கண்டறிந்தனர். அந்நூல்களில் இருந்த பல்வேறு பாடங்களைப் பார்த்துத் தாம் எழுதும் நூலுக்கு இன்னது மூலபாடம் என்பதைக் கூறியதோடு மாற்றுப் பாடங்கள் இருந்ததைக் குறிப்பிட்டனர். இதற்குச் சான்றாக **‘என்பதும் பாடம்’**, **‘இன்னவாறு பாடங் கூறுவாரும் உளர்’**, **‘இன்ன காரணத்தால் அது பொருந்தாமை யறிக’** என்னும் சொற்றொடர்களைக் குறிப்பிடலாம்.

பழைய உரையாசிரியர்களைத் தொடர்ந்து ஏட்டுச் சுவடியில் இருந்த நூல்களை அச்சில் பதிப்பித்த பதிப்பாசிரியர்கள் மூலபாட ஆய்வை மேற்கொண்டுள்ளனர். அவர்கள் தாம் பதிப்பிக்க இருந்த நூல்களுக்குரிய பல்வேறு ஏட்டுச் சுவடிகளைப் பரிசோதித்து மூலபாடத்தை உறுதி செய்ததுடன் மாற்றுப் பாடங்களை அடிக்குறிப்பில் சுட்டியுள்ளனர். இவ்வாறு தமிழில் மூலபாட ஆய்வானது உரையாசிரியர்களாலும் பதிப்பாசிரியர்களாலும் மேற்கொள்ளப்பட்டதை அறியமுடிகிறது.

தமிழில் காலந்தோறும் நிகழ்த்தப்பட்டு வந்த மூலபாட ஆய்வைச் செழுமைப்படுத்திச் செவ்வியல் தமிழ் நூல்களைச் செம்பதிப்பாக வெளியிட வேண்டிய கடமை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு உண்டு. அதன்பொருட்டு இந்நிறுவனம் செவ்வியல் நூல்களான தொல்காப்பியம் முதலாக முத்தொள்ளாயிரம் ஈறாகவுள்ள நாற்பத்தொரு நூல்களுக்கும் உள்ள ஏட்டுச் சுவடிகள், தாட்சுவடிகள், அச்சுப் பதிப்புகள், உரை மேற்கோள்கள் ஆகிய அனைத்துத் தரவுகளைத் திரட்டி மூலபாடத்தைத் தேர்வு செய்து செம்பதிப்பாக்கும் பணியினைச் செய்து வருகிறது. அச்செம்பதிப்பினை வலுசேர்க்கும் வகையில், **‘மூலபாடத் திறனாய்வு: தமிழ்ச் செவ்வியல் நூல்களில் ஒலியியல் / எழுத்தியல் வேறுபாடுகள்’** என்னும் பொருண்மையில் அமைந்த பயிரலரங்கை நடத்த சுவடியியல் புலம் திட்டமிட்டுள்ளது. பயிலரங்கில் இத்துறை சார்ந்த அறிஞர்கள் பயிற்றுரை வழங்க உள்ளனர்.

இப்பயிலரங்கு 23.11.2022 முதல் 29.11.2022 முடிய ஏழு நாட்கள் நடைபெறவுள்ள நிலையில் **கல்லூரி, பல்கலைக்கழகம், நிறுவனம்** ஆகியவற்றில் பணியாற்றும் **ஆசிரியர்கள்** கலந்து கொண்டு பயன்பெற அழைப்பு விடுக்கப்படுகிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 25.
2. பயிரலரங்கு நடைபெறும் நாட்கள்: 23.11.2022 முதல் 29.11.2022 முடிய 7 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை 10.00 – 01.00 & மாலை 02.00 – 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்குத் தேநீரும், மதிய உணவும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து **workshopc@cict.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்பு கொள்ள

வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி / அலைபேசி வழியாகத் தொடர்பு கொள்ளக்கூடாது.

8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.

9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.

10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் **16.11.2022.** கால தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தெர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **17.11.2022** அன்று மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

13. இப்பயிலரங்கில் பங்கேற்போர் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்பட மாட்டாது.

14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை – 600 100

## சுவடியியல் புலம்

## மூலபாடத் திறனாய்வு: தமிழ்ச் செவ்வியல் நூல்களில் ஒலியியல் / எழுத்தியல் வேறுபாடுகள்

(Textual Criticism: Phonological / Orthographical Variations in the Classical Tamil Texts)

**பயிலரங்கம் - 12**
**(23.11.2022 – 29.11.2022)**

**விண்ணப்பப் படிவம்**

நிழற்படம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | | | | | | |
| | | ஆங்கிலம் | | | | | | |
| 2. | பதவி / பணிநிலை | | | | | | | |
| | நிரந்தரம் / தற்காலிகம் | | | | | | | |
| 3. | பிறந்த நாள் / வயது | | | | | | | |
| 4. | பாலினம் (✓ செய்க) | | ஆண் | | பெண் | | திருநங்கை | |
| 5. | வகுப்பு (✓ செய்க) | | பொது | | இ.பி.வ. | | பட்டியல் இனத்தவர் | |
| 6. | கல்வித் தகுதிகள் | | | | | | | |
| 7. | பணியில் சேர்ந்த நாள் | | | | | | | |
| 8. | நிறுவன முகவரி (தொலைபேசி / மின்னஞ்சல் முகவரியுடன்) | | | | | | | |

<table>
<tr><td>9.</td><td>இல்ல முகவரி<br>(தொலைபேசி / மின்னஞ்சல் முகவரியுடன்)</td><td colspan="4"></td></tr>
<tr><td>10.</td><td>புலன எண்</td><td colspan="4"></td></tr>
<tr><td>11.</td><td>சிறப்பறிவு பெற்றுள்ள துறை</td><td colspan="4"></td></tr>
<tr><td>12.</td><td>முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு</td><td colspan="4"></td></tr>
<tr><td>13.</td><td>தாங்கள் பணியாற்றும் கல்வி நிறுவனம் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 2 (F) மற்றும் 12 (B) அங்கீகாரம் பெற்றுள்ளதா? ஆம் / இல்லை (✓ செய்க) ஆம் எனில் விவரம் தரப்படல் வேண்டும்.</td><td colspan="4"></td></tr>
<tr><td rowspan="2">14.</td><td rowspan="2">செம்மொழி நிறுவனம் இக்கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக.</td><td>ஆம்</td><td></td><td>இல்லை</td><td></td></tr>
<tr><td colspan="4"></td></tr>
</table>

(கையொப்பம்)

நாள்:
இடம்:

உரிய முத்திரையுடன்
முதல்வர் / பதிவாளரின் கையொப்பம்